

ரஜினி கோத்தாரி (1928 – 2015)

# ரஜினி - அறிவுலகின் சூப்பர்ஸ்டார்

ஞாநி

இந்த வருடம் **(2015)** ஜனவரி **19** அன்று, தன் **87**வது வயதில் காலமான ரஜினி கோத்தாரி, இன்று , இந்தியா, குறிப்பாக தமிழகம் சந்திக்கும் குண்டர் அரசியல், சாதிய அரசியல் அனைத்தின் அறிகுறிகளையும் சுமார் **40** ஆண்டுகள் முன்பே அடையாளம் காட்டி, இதற்கான மாற்றுகள் என்ன என்பதைத் தொடர்ந்து அக்கறையுடன் ஆராய்ந்த சமூக அரசியல் அறிஞர்.

பரோடாவில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ரஜினி கோத்தாரி ஆரம்ப வருடங்களிலேயே தன் அரசியல் ஆய்வுக்கட்டுரைகளின் வழியே அறிவுலகத்தைத் திரும்பிப் பார்க்கச் செய்தவர். தனக்குக் கிடைத்த உதவித் தொகையான **70** ஆயிரம் ரூபாய்களைக் கொண்டு அவர் **1963**ல் தொடங்கிய வளரும் சமூகம் பற்றிய ஆய்வுகளுக்கான மையம் **(Centre For Study Of Developing Societies)** இன்று இந்தியாவின் முன்னோடி சமூகவியல் ஆய்வு மையமாகத் திகழ்கிறது. அப்போது அவருக்கு வயது **35** கூட முடியவில்லை. இந்த ஆய்வுமையத்தின் வழியே அடுத்த **50** வருடங்களில் மிக முக்கியமான சமூகவியலாளர்கள் உருவாகி தழைத்தார்கள். அஷீஷ் நந்தி, சுதிர் காக்கர், ரொமிலா தாப்பர், டி.எல். சேத், டி.என்.மதன், யோகேந்திர யாதவ் என்று இந்தப் பட்டியல் நீளுகிறது.

ஆய்வு மையத்தைத் தொடங்க அவர் பயன்படுத்திய உதவித்தொகை அவருக்கு அன்றைய ஏஷியன் பவுண்டேஷனின் பேராசிரியர் ரிச்சர்ட் பார்க்கால் வழங்கப்பட்டதை சி.ஐ.ஏ சதியாக சிலர் கருதினர். அறுபதுகளில் உலகெங்கும் சி.ஐ.ஏ இவ்வாறு நிதி உதவி அளித்து அமைப்புகளை உருவாக்குவது பற்றி வாஷிங்டன் போஸ்ட் கட்டுரை வெளியிட்டதைப் படித்ததும் ரஜினி கோத்தாரி தனக்கு ஏஷியா பவுண்டேஷன் அளித்த தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட விரும்பினார். இதற்காக அவர் பிரதமர் இந்திரா காந்தியை அணுகி இந்திய அரசு மான்யம் அளிக்கக் கோரினார். அப்போது இந்திரா இதைக் கேட்டு சிரித்துவிட்டு, இந்திய அரசின் பல திட்டங்களுக்கே சி.ஐ.ஏ. பல வழிகளில் நிதி கொடுத்துக் கொண்டிருப்பதாக தன்னிடம் சொன்னதாக ரஜினி கோத்தாரி ஒரு நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்! மத்திய அரசு மானியம் கொடுத்ததும் ரஜினி, ஏஷியன் பவுண்டேஷனுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார். ஐம்பது ஆண்டுகளுக்குப்

பின்னர் ரஜினி உருவாக்கிய மையத்தில் அவர் பெயரிலான ஒரு ஆய்வு இருக்கைக்கு ஃபோர்ட் பவுண்டேஷன் நிதி அளித்துள்ளது!

ரஜினி கோத்தாரி இந்த ஆய்வு மையத்தை தொடங்கியபோது இந்தியாவில் சமூகவியல் ஆய்வு என்பது பெருமளவு பொருளாதாரக் கோட்பாடுகளைச் சார்ந்தே இருந்தது. இந்த ஆய்வுகள் எல்லாம் அரசு தரக்கூடிய புள்ளி விவரங்களையே பெரிதும் சார்ந்திருந்தன. ஒரு பிரும்மாண்டமான ஜனநாயக அமைப்பு இந்தியாவில் இயங்கிக் கொண்டிருக்கும் சூழலில், கட்சி அரசியல், அடிமட்ட மக்கள் அரசியல் இவற்றுக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் இருக்கும் தொடர்பும் தாக்கமும் ஆய்வுலகத்தின் கவனத்துக்கு அப்பாற்பட்டவையாகவே இருந்தன.

இது தவறு என்று கருதினார் ரஜினி கோத்தாரி. அரசுக்கு வெளியே சுயேச்சையான கள ஆய்வுகள் துல்லியமான தரவுகளுடன் செய்யப்படவேண்டுமென்றும், மக்களின் அன்றாட வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசியல் அமைப்பும் இயக்கமும் இணைத்தே ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டுமென்றும் அவர் கருதினார். இந்த திசையில் அவர் வழிநடத்திய ஆய்வுகளும் ஆய்வு மையமும் இந்திய சமூக விஞ்ஞான அறிவுலகில் பெரும் தாக்கத்தை இன்று வரை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மக்களை பாதிக்கும் அரசியல் பற்றிய ஆய்வுடன் ரஜினி கோத்தாரி நிற்கவில்லை. அதிகாரத்திலும் அரசியலிலும் இருக்கும் முக்கியமானவர்களுடன் நேரடியாக உறவாடலும் உரையாடலையும் நிகழ்த்தி வந்தார்.நேரு காலத்தின் தொடக்கத்தில் இருந்த பெரும் எதிர்பார்ப்புகள் அறுபதுகளின் கடைசியில் மக்களிடையே சிதையத் தொடங்கிய சூழலில், அரசு இயந்திரம் ஒவ்வொரு மட்டத்திலும் அதிகார சக்திகளின் பீடமாக மாறிக் கொண்டிருப்பதை ரஜினி கோத்தாரி போன்றவர்கள் கவலையுடன் கவனித்தனர். இந்திரா காந்தி ஒரு மாற்றத்தை விரும்புபவராக டெல்லியின் அறிவுலகில் ஒரு தோற்றம் காட்டி வந்த நேரம் அது. இந்திராவின் செயலாளர் பி.என்.ஹக்சர் அடிக்கடி இந்திராவின் வீட்டில் ஒரு அறிஞர் கூட்டத்தைக் கூட்டி இந்திராவுடன் விவாதிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். இதில் அசோக் மேத்தா, ரொமிலா தாப்பர், எம்.என்.ஸ்ரீனிவாஸ், சிசிர் குப்தா, இதழாளர் ஷியாம்லால் முதலானோருடன் ரஜினி கோத்தாரியும் தொடர்ந்து பங்கேற்றார். அப்போதெல்லாம் 'செமினார்' போன்ற ஆழமான அலசல் இதழ்களின் தீவிரமான வாசகியாக இந்திரா இருந்தாரென்றும், காங்கிரஸ் கட்சியை தங்கள் பிடியில் வைத்திருந்த பழைமைவாதத் தலைவர்கள் மீது கடும் வெறுப்புடன் இருந்ததாகவும் ரஜினி கோத்தாரி ஒரு நேர்காணலில் தெரிவித்தார்.

நெருக்கடி நிலையை இந்திரா பிரகடனம் செய்வதற்கு முன்னதாகவே ரஜினி கோத்தாரியும் இன்னும் பல அறிஞர்களும் இந்திராவிடமிருந்து விலகும் நிலை ஏற்பட்டது. குஜராத்தில் ஊழலுக்கெதிராக ஜெயப்பிரகாஷ் நாராயண் வழிகாட்டலில் நடந்த நவ நிர்மாண் இயக்கத்துக்கும் இந்திராவுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டில் முதலில் ரஜினி போன்ற அறிஞர்களின் வலியுறுத்தலால்தான் இந்திரா குஜராத் அரசைக் கலைக்க முன்வந்தார். ஆனால் இந்திராவின் நெருக்கடி நிலை பிரகடனம், ரஜினி முதலானோரின்

கடும் எதிர்ப்பை சந்தித்தது. சஞ்சய் காந்தி இந்திய அரசியலில் மிக ஆபத்தான ஒரு போக்குக்கு முன்னோடி என்பதை ரஜினி கோத்தாரி அடையாளம் கண்டு விமரிசித்தார். **1977**ல் ஜனதா உருவானபோது அதன் அரசியல் பிரகடனத்தை வடிவமைப்பதில் ரஜினிக்கும் முக்கிய பங்கு இருந்தது.

இந்தக் கட்டத்திலிருந்து ரஜினி கோத்தாரி பெரும் அரசியல் இயக்கங்களிலிருந்து தன் கவனத்தை முற்றிலும் வேறு பக்கம் திருப்பினார். அடிமட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நாடெங்கும் நடந்த சின்னச் சின்ன, ஆனால் தீர்க்கமான மக்கள் இயக்கங்கள், இவையே இந்திய ஜனநாயகத்தின் அடித்தளமாக இனி அமையவேண்டும் என்ற கருத்தை அவருக்கு பலப்படுத்தின. இப்படி நாடு முழுவதும் தனித்தனியே இயங்கும் சமூக ஆர்வலர்களுக்கிடையே ஓர் உரையாடல் தொடர்ந்து நடக்கவேண்டுமென்று ரஜினி முனைந்தார். அதற்காக 'லோகாயன்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். 'லோகாயன்' களப்பணியில் இருந்த வெவ்வேறு சிந்தனையாளர்களிடையே ஒரு கருத்துப் பகிர்வுக்கான தளமாக செயல்பட்டது.

அப்போதுதான் எனக்கு அவரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் 'லோகாயன்' அமைப்பில் முக்கிய பங்காற்றிய ஆய்வாளரும் எழுத்தாளருமான எஸ்.வி.ராஜதுரையின் வழியே **1982**ல் ரஜினி கோத்தாரியை சந்தித்தேன். அப்போது நான் அவருடன் நடத்திய விரிவான நேர்காணலை என் தீம்தரிகிட இதழில் வெளியிட்டேன். குண்டர்களை அரசியல் தலைவர்கள் பயன்படுத்தும் அரசியல் மாறி, குண்டர்களே அரசியல்வாதிகளாக ஆகும் போக்கைப் பற்றி அவர் அதில் ஆழமாக விவாதித்திருந்தார். மக்கள் இயக்கங்கள் பற்றியும் சிவில் உரிமை அமைப்புகளின் அவசியம் பற்றியும் அவர் அப்போது அதிக ஈடுபாட்டுடன் இருந்தார்.

இன்றளவும் இந்தியாவில் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டத்தில் முன்னிலையில் இருக்கும் மக்கள் சிவில் உரிமை அமைப்பான **People's Union For Civil Liberties (P.U.C.L )** எனப்படும் பி.யூ.சி.எல்லின் பொதுச் செயலாளராகவும் அவர் அப்போது செயல்பட்டார். நெருக்கடி நிலையையடுத்து உருவான பி.யூ.சி.எல் அதுவரை இந்திய சமூகத்தில் இருந்திராத ஒரு முன்னோடி மனித உரிமை அமைப்பாகும்.

சமூக அக்கறையுடைய நிறுவனங்களை உருவாக்குவதில் அக்கறை காட்டிய ரஜினி கோத்தாரி, தானே நிரந்தரமாக அவற்றில் பதவிகளில் இருக்க விரும்பியவருமல்ல. அவர் உருவாக்கிய சி.எஸ்.டி.எஸ்சின் தலைமைப் பொறுப்பிலிருந்து அவர் தனக்கு **50** வயதானதும் விலகிக் கொண்டார். அது மட்டுமல்ல, அவர் அதன் தலைவராக இருந்தபோது அதில் பணியாற்றத் தேர்வு செய்த அறிஞர், அவரை விட அதிக ஊதியம் கேட்டபோதும் மறுக்காமல் ஒப்புக் கொண்டார். அண்மை வருடங்களில் இந்திய அரசியலில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் சாதியின் முக்கியத்துவத்தை அவர் அறுபதுகளிலேயே அடையாளம் காட்டி கட்டுரைகள் எழுதியவர். இந்திய சூழலில் வர்க்க அரசியல் மட்டுமல்ல, சாதி அரசியலும் முக்கியப் பங்கு வகிக்கும் என்பதை அவர் அப்போது சுட்டிக் காட்டிய போது ஏற்காதவர்கள் கூடப் பின்னாளில் ஒப்புக் கொள்ளவேண்டி வந்தது. இன்று இந்திய சமூக அரசியல் ஆய்வுகளில் பிரதானப் பங்கு

வகிக்கும் பார்வைகள் அனைத்துக்கும் வித்திட்டவர் ரஜினி கோத்தாரி என்று யோகேந்திர யாதவ் குறிப்பிட்டிருக்கிறார்.

கடைசிவரை அவர், அடித்தட்டு மக்கள் பங்கேற்கும் ஜனநாயக அமைப்பு, மனித உரிமைகள், இந்தியச் சூழலுக்கேற்ற ஜன நாயகவடிவங்கள், அதிகாரப் பரவலாக்கம், சமூக நீதி ஆகியவற்றில் ஈடுபாட்டுடன் இருந்து வந்தார். ரஜினி கோத்தாரியின் ஒரே மகன் ஸ்மிது கோத்தாரியும் இதே துறைகளில் ஆர்வத்துடன் இயங்கிவந்த சூழலியல், சமூக விஞ்ஞானி. (ஸ்மிது 2009லேயே தன் 59ம் வயதில் காலமானார். அதற்குப் பத்தாண்டுகள் முன்னர் ரஜினியின் மனைவி காலமானார்.)

ரஜினி, ஸ்மிது இருவரையும் எனக்கு எண்பதுகளின் தொடக்கத்தில் அறிமுகம் செய்து வைத்தவர்கள் எஸ்.வி.ஆர், மறைந்த நடனக் கலைஞர் சந்திரலேகா ஆகியோர். அப்போது வெளிவந்த லோகாயன் செய்திக் கடிதங்கள், ஆய்வு அறிக்கைகள், ரஜினி, ஸ்மிது ஆகியோருடன் பங்கேற்ற பயிலரங்குகள் என் சமூக அரசியல் பார்வையை விரிவுபடுத்தவும் ஆழமாக்கவும் பெரிதும் உதவின.

ரஜினி கோத்தாரியைச் சம்பிரதாயமான வலதுசாரி அறிஞர்கள் இடதுசாரியாகவும், மரபான இடதுசாரி அறிஞர்கள் வலதுசாரியாகவும் கருதினார்கள். அவர் இரண்டுமாகவே இருக்கவில்லை. மக்கள் போராட்டங்கள், இயக்கங்கள் ஆகியவற்றைத் தேர்தல் அரசியலுக்கு நிகராகவும் கூடுதலாகவும் அவர் முக்கியத்துவம் அளித்தது வலதுசாரிகளுக்குச் சிக்கலாக இருந்தது. பொருளாதாரப் பார்வை மட்டுமன்றி கலாச்சார - அரசியல் பார்வையும் தேவை என அவர் அழுத்தம் கொடுத்தது இடதுசாரிகளுக்குச் சிரமமாக இருந்தது.

உண்மையில் ரஜினி கோத்தாரி இந்தியாவின் முன்னோடியான பப்ளிக் இன்டெலக்சுவலாவார். கோட்பாடுகளை உருவாக்குவதிலும் அலசுவதிலும் மட்டும் ஈடுபடுவதோடு நிற்காமல், சமூக அரசியல் கலாச்சார நிகழ்வுகளில் பகிரங்க நிலைப்பாடு எடுத்து களப் பணியும் ஆற்றும் பப்ளிக் இன்டெலக்சுவலாக அமெரிக்காவின் நோம் சாம்ஸ்கி திகழ்வதுபோல இந்தியாவில் ரஜினி கோத்தாரி விளங்கினார்.

ரஜினி கோத்தாரியின் ஒரு நேர்காணல் தவிர தமிழில் எதுவும் அவர் பற்றி இல்லை என்பது தமிழ் அறிவுலகத்துக்கு இழப்பேயாகும். ரஜினி கோத்தாரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளை தமிழில் கொண்டு வந்தால் நிச்சயம் நம் அறிவுலகம் செழுமையடையும்.

**காலச்சுவடு ,**
**மார்ச் 2015**